செ.வெ.எண்.73 நாள்.23.8.2017

## கோ-ஆப்டெக்ஸ் பட்டுமாளிகை விற்பனை நிலையத்தில் ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு பட்டு கண்காட்சி சிறப்பு விற்பனை துவக்கவிழா

இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் திகழ்வதற்கு நெசவாளர்களின் ஒத்துழைப்பும் வாடிக்கையாளர்களின் பேராதரவும் தான் முக்கிய காரணங்களாகும். வாடிக்கையாளர்களின் பேராதரவினால் 2016-17 ஆம் ஆண்டில் ரூ325.00 கோடி அளவிற்கு கோ-ஆப்டெக்ஸ் சில்லறை விற்பனை செய்து வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளின் பலனாகவும் வாடிக்கையாளர்களின் ஏகோபித்த பேராதரவினாலும் கோ-ஆப்டெக்ஸின் 82 ஆண்டு கால வரலாற்றில் இந்த சாதனை விற்பனை நிகழ்த்தப்பட்டுள்ளது . அதில் திருநெல்வேலி மண்டலத்தில் மட்டும் 2016-17 ஆண்டில் ரூ.28.19 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு பட்டு கண்காட்சி சிறப்பு விற்பனை கோ-ஆப்டெக்ஸ் பட்டுமாளிகை விற்பனை நிலையத்தில் **23.08.2017** முதல் **14.09.2017** வரை நடைபெற உள்ளது.

இக்கண்காட்சியில் புத்தம்புதிய 101 வடிவமைப்புகளில் 101 வண்ணங்களில் அழகிய மென்பட்டு சேலைகள், காஞ்சிவரம் பட்டு சேலைகள், சேலம் பட்டு சேலைகள் ,விற்பனைக்காக காட்சிபடுத்தப் பட்டுள்ளன. சிறப்பு தள்ளுபடி 30% வழங்கப்படுகிறது.

ஆசிரியர் தின சிறப்பு பட்டு கண்காட்சி விறபனை துவக்க விழா திருநெல்வேலி டவுண் வடக்கு ரத வீதியில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸ் பட்டு விற்பனை நிலையத்தில் 23.08.2017 அன்று மாலை 6.00 மணி அளவில் நடைபெற்றது.இவ்விழாவில் திருநெல்வேலி முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.கோ.தனமணி, B.Sc.MA,M.Ed, அவர்கள் குத்து விளக்கு ஏற்றி விறபனையை துவக்கி வைத்தார்கள். மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் திரு.K.V.ரவீந்தரன் நாயர், M.A,B.Ed, உதவி தொடக்க கல்வி அலுவலர் , திருமதி ஜெபரத்தினம் சுகந்தி, M.AB.Ed மானூர் உதவி தொடக்க கல்வி அலுவலர், திருமதி.V.கீதா, MA,M.Ed , மானூர் கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர் மற்றும் திரு.P.முத்துப்பிள்ளை,B.A.B.Ed ஆகியோர் சிறப்பு விருத்தினராக கலந்து கொண்டனர். முதல் விற்பனையை திருநெல்வேலி கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி .J.நாச்சியார் ஓ ஆனந்த பைரவி, பெற்றுக்கொண்டார்கள்.

திரு.க.இசக்கிமுத்து கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர், திருநெல்வேலி அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார்கள் ,இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோ-ஆப்டெக்ஸ் மேலாளர் மற்றும் ஊழியர்கள் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கோ-ஆப்டெக்ஸ்